சுபமஸ்து.

திருச்சிக்கல் ஸ்தலபுராணம்.

விநாயகர் காப்பு. (க)

திங்கண்மேவிய செஞ்சடையோன் பதந்
துங்கமோடு வணங்கி நற்சூதமாம்
பங்கயில் கனிகொண்ட பரமனைத்
தங்கவைத்துளத்தே துதி சாற்றுவாம்.

வெண்ணெலிங்கீசுரர் துதி. (உ)

கண்ணகனுலகின் முத்தொழிற் பிறங்கக்
கஞ்சன்மாலுருத்திரனென்ன
நண்ணியபொருளை யம்பலத்தாடு
நாதனை யுமையொரு பாகம்
விண்ணவரேத்த விடைவரு முதலை
வேதவேதாந்தமாய் மேலாய்த்
தண்ணிதாவமர்ந்த வெண்ணெலிங்கேசர்
தாமரைத் தாடலைச் சார்வாம்.

அருள்வேலிடங்கண்ணியம்மையார் துதி. (௩)

தக்கனுர் மகளாய்த் தாங்குதல் நாமந்
தக்க தன்றெனமலையரயன்
பக்குவமாகப் பெண்மகவாகிப்
பன்னவர் விண்ணவர் பரவ.
நக்கனுர் மணந்தவ்வுலகுயி ரளித்த
நவந்தரு பூரணி நலமே
புக்கிய வருள்வே லிடங்கணிப் பாதப்
போதுளப் போதுசேர்த் திடுவோம்.

தலவிநாயகர் துதி (௪)

சந்ததம் வழுத்துவோர் துயருஞ் சார்ந்தவர்
பந்தமு மகற்றியே பரமனுரிடம்
விந்தை யினளித்திடும் விமல மேவிய
சுந்தர விநாயகன்றுகளில் பாதமே.

ஆறுமுகநாதன் றுதி. (௫)

பாறுவிழ்களத்தினில சுரர்ப் பாற்றிட
ஏறுகையுடையவர் துன்பமெற்றிட
வீறுகொள மரர்கள் வாழவேல் விடும்.
ஆறுமாமுகன வரடிகண் டுய்குவாம்.

சரஸ்வதியம்மன் றுதி (௬)

பகர்தரு பறுவல் மீதும் பங்கயமலரின் மீதும்
புகரிலாமறையின் மீதும் புலவர்கள் சொல்லின்மீதும்
தகரிலா விரிஞ்சன்றனுந் தங்கியே யமரும் வாணி
நிகரிலாதாளென் சென்னி நிறுத்திகை குவித்துவாழ்வாம்.

சமயாச்சாரிகள் துதி. (௭)

கண்ணகனுலகிற் சைவங்கருளடையாமற் கண்டு
விண்ணவர் மகிழ மற்றைச் சமையமே வெறுக்கொ
[ண்டேக
உண்மையை யளித்தாட்கொண்ட வித்தமர் சிவத்தைப்
[போற்றும்
வன்மையர் பாதப்போதெென மனத்தினுஞ் சிரத்துங்
[கொள்வாம்.

நூல்வழி. (௮)

புகழ்தருகின்ற புராணமூவாறிற்
புண்ணியக் காதையைப் புகலும்
மகிழ் தருகாந்தங் காளிகாண்டஞ் சீர்
மருவிய தீர்த்தமான் மியத்தில்.
திகழ்தர மல்லிகாவனச் சிறப்பைச்
செப்பினன் சூதனே யதனை
முகிழ்மலர் நிரைந்த நைமிசவனத்தின்
முனிவரர் கேட்டு வாழ்ந்தனரே.

மொழிபெயர்த்தோர். (கூ)

சுகந்தருகின்ற சிக்கன்மா நகரிற்
றோன்றிய புனித னற்றவர்கள்
அகந்தனி லேத்துஞ் சுப்பிரமணிய
வழகிய குருக்களின் முயர்ச்சி
மிகவெடுத் தழகார் தஞ்சையிற் புகுந்து
மேன்மைசேர் சரஸ்வதிமாலில்
புகுந்துநற் கிரந்த சுலோகமே யெடுத்து
புக்ல தமிழாக்கிடப் புகன்றான். 1.
திருவளர் மாடமுயர் சிதம்பரத்திற்
றீக்ஷதர் குலமணியான
குருவளர் பரமேஸ்பரனெனுங் குணத்தோன்
கோதிலாதவர் சொலுங் கிரந்தம்.
தரும் சுலோகத்தைத் தென்மொழியதனாற்
சாற்ற விஸ்வாவசு துலாத்தில்
உருவளர் புயத்தானொரு மாணிக்க
வாசகனுற்றெழுதினனே. 2.
எழுதிய வண்ணம் சிக்கன்மா நகரை
யெய்திய கோவிந்தசாமி
முழுதுணர் புனிதனேற்று நற்பிறைசை
முத்துசாமி யெனு நாவலன் பாற்.
பழுதிலாதிலக வரைந்து தந்திடெனப்
பகர்ந்திடத்துதி யொடுங் கதையைத்
தொழுதருள் பெறவே யெழுதிடவதனைத்
துலங்கவச்சியற்றினன் மாதோ. 3.

நூற்பயன் (க0).

புத்திரப் பேற்றையும் பொருளு நல்கிடும்
சத்திய நெறிதனைச் சார்ந்தளித்திடும்
முத்தியைக் கொடுத்திடு முதன்மைக் காதையைச்
சித்தம் வைத்தேத்துவோர் சிறந்து வாழ்வரே.

அவையடக்கம். (கக)

உண்ணுதற்கேலாவோத நீர்வான் வாயுற் றுவக்காலே [யேயுலக
ரெண்ணுதற்கறிய வமிழ்தெனக் கொள்வாரென்பதை [யுணர்ந்து நானிங்கு
கண்ணுதற்காதை விரித்தனனிதனைக் கற்றவர் செவி [யமிழ் தாக்கி
நண்ணுதற் காமால் வழுவிறித்துயர்வா நலமிக வெய் [திடமாதோ.

உ

சிவமயம்.

திருச்சிக்கல் ஸ்தலபுராணம்.

நூல் 1-வது நைமிசவனவத்யாயம்.

சிவனடியார்களைத் தோழமை கொண்டு அவர்களுடைய எவ்வித காரியங்களையும் யாதொரு விக்கினங்களுமின்றி நிறைவேற்றுகின்றவரும் செந்தாமரை மலரை யொத்தக் கண்களையுடையவரும் ஸ்ரீபரமசிவத்தின் உவமையற்ற உரு

வத்தைக்கொண்டவரும் புதல்வருமாகிய ஸ்ரீ யானைமுக விநாயகக் கடவுளை நம்முடைய சகலகாரியங்களும் சித்திபெறும் பொருட்டு எப்பொழுதும் தொழுது தோத்திரம் செய்வாம்.

செந்திருவளருந்தன் கடலுடுத்தவிப் புண்ணிய பூமியின் கண் மிகவும் செழிப்புற்றோங்கியதும் சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகில், நீலவருணம் என்னும் சப்த மேகங்களும் தவழப்பெற்றதும் ஆகாயம் வரைக்கும் அளாவி நின்றதுமான சந்தனம், குங்குமம், சாலம், ஆசினி, ஆல், அசோகு, அடம்பு, கடம்பு, பாலை, தாதகி, பாதிரி, கடவிளம், ஏலம், வஞ்சி, இலஞ்சி, உதும்பரம், மாதளை, சண்பகம், பஞ்சரம், போதி, கோங்கு, புரசு, புன்னாகம், வேய், சூதம், வாழை, சுரபுன்னை, பூகதம், வன்னி, தமாலம், நாரந்தம், முல்லை, மவ்வல், முளரி, மல்லிகை, இருவாட்சி, நீலோற்பலம், கல்லகாரம், குமுதம், கயரவம், பிச்சி, சிறு சண்பகம், இவ்வகைப்பட்டப் பூந்தருக்களும், பூங்கொடிகள் படரப்பெற்ற தடாகங்களும் சூழப்பற்றனவாகி மானும், புலியும் மருவி வாழவும் யானையுஞ் சிங்கமுமர்ந்து வாழவும், எலியும் பாம்பும் இருந்து வாழவும் அன்னம், புறா, அன்றில், கேகயப்புள், மயூரம், கிஞ்சுகம், குயில், சரபம், சாதகப்புள், செம்போத்து, வனசார்த்தூலம், நாகணவாய்ப்புள், சக்கரவாகம், சகோரம், கொரண்டம் ஆலா, கிருட்டி, காக்கத்துவா, வலியன், நாரை, சிறவியே முதலிய பட்சிக்கூட்டங்கள் நிரையப் பெற்றதுமாகிய

நைமிசவன மென்னும் புண்ணிய வனத்தின் கண் காசிபர், அத்திரி, பாரத்துவாசர், கௌதமர், காலவர், புலத்தியர், புலகர், குசிகர், குஸ்தவர், வாமதேவர், ஆங்கிரசர், வான்மீகர், பிருகு, சத்தியபூதர், ஜாபாலிகர், தேவலர், ததீசி, சுபாலர், தூர்வாசர், பராசரர் முதலிய மஹாரிஷிகளனைவரும் மோக்ஷத்தில் விருப்பமுடையவர்களாய்ச் ஜிதேந்திரியர்களாய் ஆகார விருப்பமற்றவர்களாய் சற்புருஷ சம்பன்னர்களாய்ச் சத்தியத்தை நித்தியமாகக் கைக்கொண்டவர்களாய் சர்வலோகத்திற்கு முழு முதற்கடவுளாயுள்ள ஸ்ரீபரமேஸ்வரரையே சதாகாலமும் மிக்க அன்போடும் பூசிப்பவர்களாய் ஔபாசனம் அக்கினிஹோத்திர முதலிய அக்கினியிற் செய்யுங் காரியங்களைச் செய்கின்றவர்களாய் சகல யாகங்களின் விதிகளை நன்குணர்ந்தவர்களாய் உலகத்திற்காகிய க்ஷேமாதி காரியங்களையே செய்கின்றவர்களாய் அஹங்கார மமஹாரங்களை யெல்லாமறுத்தோட்டியவர்களாய் பரமசிவத்தின் திருவடித்தாமரையின்கண்ணே மனதைப் பேறுது நிலைநிறுத்தி வைத்தவர்களாய் சமம், தமம், விடல் சகித்தல், சமாதானம், சிரத்தை முதலிய ஆறுவித குணங்களையுமுடையவர்களாய் மான்தோலை மேற்கொண்டவர்களாய் புலித்தோலை யிடையிற் சுற்றியவர்களாய் சடைமுடி கொண்டவர்களாய் வேதாந்த விசாரணை செய்கின்றவர்களாய் வெண்மை தங்கிய விபூதியை மேனிமுழுதும் உத்தூளணம் செய்து உருத்திராக்ஷ மணியைச்சிரத்திலுங் கண்டத்திலும் உரத்திலும் அழகுவிளங்க ஆபரண

மாகத் தரித்துக்கொண்டு சூரியனைப்போல விளங்கத்தக்கத்திருமேனியை யுடையவர்களாய் அமர்ந்த அனேக மஹாரிஷிகள் அவ்வரண்யத்தில் நித்தியனை நோக்கிச்சத்தியமாகத் தவஞ்செய்யலானார்கள்.

சிலர் யாகாதி கிர்த்தியங்களையே செய்துவரவும், சிலர் தானத்தாலும் சிலர் வில்வமாதிய புஷ்பங்களாலும் கயிலாயபதியாகிய முக்கண்மூர்த்தியினுடையத் திருவடித்தாமரையை இடைவிடாது பூசித்துக் கொண்டு வந்தார்கள்.

ஒரு சமயத்தில் அறம், பொருள், இன்பம், வீடு, என்ற நான்கு புருஷார்த்தங்களையும் மிக சுலுபத்தில் அறிந்துகொள்ள விரும்பியவர்களாய் அனைவரும் ஒன்று சேர்ந்து ஓர் சபை கூடினார்கள். ஆனாலவர்கள் இராகத்துவேஷாதி குணங்களை யறுத்தவர்கள் உலகத்தார் நிமித்தம் இவ்விதம் சபையைக் கூடினார்களே யன்றிவேறில்லை. இவர்களின் மாணாக்கர்களின் எண்ணை ஆதிசேடனாலேனும் அளவிடற் கூடாது.

இப்படிக்குக் கூடியவர்கள் பலரும் ஒருவரோடு ஒருவர் வினாவிக்கொள்ளும் வினாக்களாவது ! இப்பூமியின் கண் எந்த க்ஷேத்திரம் புண்ணிய க்ஷேத்திரமாகும் எந்த தீர்த்தம் புண்ணிய தீர்த்தமாகும் மனைவி, மக்கள், அர்த்தம் என்ற மூன்றேடணையின் கண் அகப்பட்டுத் தகிக்கப்பெற்றவர்களாகிய மனுஷர்களுக்கு மோக்ஷம் எப்படிக் கெய்தும். இதர தேவர்களிடம் மனம் செல்லாமல் ஸ்ரீபரமசிவத்தின் திருவடித்தாமரை மலரே கதி யென்ற உத்தம சிவபக்தி

யானது எப்படி சித்திக்கும் மனோவாக்காய கர்மங்களுக் குப்பலம் கிடைக்கும் விதம் எவ்விதம் என்று வினாக்களே யாம்! அப்படிக்கு வினாவிய மஹரிஷிகளைப் பார்த்துச் சௌனகமஹரிஷியானவர் எழுந்து நின்றுகொண்டு கைகூப்பி மிகுந்த வணக்கத்துடன் சொல்லத் தொடங்கினர். ஹே! மஹரிஷிகளே இவ்விதம் வினாவிய வினைக்களுக்கு விடையளிக்கத்தக்க வல்லவன் நானல்லேன் ஆயினும் சிறிது தெரிந்தவாறு சொல்லுகிறேன் அதாவது சித்தாச்சிரமமென்ற புண்ணியஸ்தலத்தில் அனேகவித யாகங்களால் பரமசிவத்தைப் பூசிக்கின்றவரும் வியாசமஹரிஷியின் மாணுக்கருட் சிறந்தவருமான சூதமஹாரிஷி என்னும் புண்ணிய மூர்த்தியை நாம் எல்லோரு மொன்று சேர்ந்து போய்த் தெரிசித்துக் கேட்டுத் தெளிந்து கொள்ளுவோம் அவரையன்றி இச்சந்தேகங்களைத் தெள்ளத் தெளியச் சொல்லவல்லவர் யாவர் ஒருவருமில்லை ஆனதால் அவரோ சாந்த குண பரிபூர்ணர். புராணம் சொல்ல வேண்டியதற்காகவே வியாச பகவானல் நியமிக்கப் பெற்றவர். அவ்வியாசரோ வென்றுல் ஸ்ரீமன்நாராயணமூர்த்தியே யுகந்தோரும் வியாசரூபமாயவதரித்து வேதங்களைச்சீர்திருத்துவர்என்று நாம் ஸகலசாஸ்திரங்களிலும் அறிந்திருக்கின்றோம் அப்பேர்ய ப்பெற்ற ஸ்ரீவியாச முனிவருடைய மாணுக்கராகிய அச்சூத புராணிகரோவென்றுல் சர்வஞ்ஞரும் கன்மகாண்டம் பக்தி காண்டம், ஞானகாண்டம் இவைகளின் விபரத்தையும் வகுப்பையும் மிக நன்ருய் அறிந்தவர் சகல தத்துவங்களையும்

நியதிகளேந்தவர். அச்சூதமஹரிஷியேயன்றி வேறுயார்தான் ஐய மறச்சொல்லவல்லவராவார், ஆனதால் அம்மஹரிஷியைப் போய் நாம் கேட்டுத் தெளிந்து கொள்வது உசிதமேயாம் என்ற செளனக முனிவாக்கியத்தைக் கேட்ட மஹரிஷிகளனைவரும் நல்லது நல்லது என்று துதித்து அப்படியே செய்குவோமென்று சகலரும் ஒன்று கூடிச் சித்தாச்சிரமென்ற ஸ்தலத்தை யடைந்தார்கள்.

அச்சித்தாச்சிரமென்ற ஸ்தலமானது அனேகவித மிருகங்களானவை ஒன்று கூடியுலாவவும் மிகுந்த சுகந்த வாடையை வீசும் பலவித மலர்களானவை மலரப் பெற்று சோலைகளாற் சூழப்பட்டும் மஹரிஷிகளுடைய பர்னக சாலையாற் பிரகாசிக்கப்படும் நிர்மல தீர்த்த ஓடைகளாற் சூழப்பட்டும் சித்தர்களுக்குச் சொந்த வாஸஸ்தானமாய் அமர்ந்த அச்சித்தாச்சிரமமென்ற ஸ்தலத்தில் சோமயாகம் செய்து கொண்டிருந்த மஹரிஷியாகிய சூதமஹாரிஷியைக் கண்டார்கள். உடனே தம்மைக் கண்ட மஹரிஷிகளனைவர்களுக்கும் தக்கபடி மரியாதை செய்து அவர்களை யிருக்கும் வண்ணம் யாக்கிஞாபித்து பிறகு தமது யாகத்தை சமாப்தி செய்து முடித்துக்கொண்டு யாகமானது சாம்பதியாகும் வரையும் தமது யாகத்திற் சூழ்ந்திருந்த நைமிசவன மஹரிஷிகளைப் பார்த்து சூதபுராணிகர் ஹே! மஹரிஷிகளே! நீங்கள் வந்த காரியமென்ன வென்று மனமகிழ்ந்து உல்லாசத்தோடும் வினவிய அச்சூதபுராணிகரை செளனகர் முதலிய மஹரிஷிகள் பணிந்து பேரா

னந்த சொரூபராய் தங்களுக்குள் இருந்த ஐயமானது அக லும் பொருட்டு கேட்கலானார்கள்.

ஹே! மஹானுபாவராகிய சூதமஹாரிஷிகளே! எங் களுடைய வினாக்களைக் கேட்டு எங்களை யிரக்ஷிக்க வேண் டும் என்று தெரிவித்து இவ்வுலகத்திலறம், பொருள், இன்பம், வீடு, என்ற புருஷார்த்தமானவை யெவ்விதம் கிடைக்கும், இவ்வுலகத்தைப் படைத்தவர் எவர்? எந்த கா ரியம் செய்தால் சிவபெருமான் பிரசன்னமாவார் மனுஷி யாள் சிவபெருமானை எவ்வாறு பூசித்து மகிழ்வது, வர்ணங் களின் ஆசாரம் எப்படிக்கு அறிவது, அதிதி பூசை செய் யும் விதி எப்படி, மோக்ஷம் எவ்வித உபாயத்தா லடையக் கூடும்? புண்ணிய க்ஷேத்திரம் புண்ணிய தீர்த்தம் எவை? வேறிற் சிக்காத சிவ பக்தியானது எப்படிக்கு வரும் ஆகி ய இவைகளுக்கு விஸ்தாரமாக விடைதந்து எங்களை ரக்ஷி க்கவேண்டுமென்றும் உங்கள் வாக்காகியவமிர்தத்தைச் சா ப்பிட்டு எங்களுக்கு திருப்தி யுண்டாகவேண்டு மென்றும் பணிந்து கேட்டுக் கொண்டார்கள்.

உடனே சூதபுராணிகரும் ஸ்ரீகணேச ஸ்ரீசுப்பிரமண் யர் ஸ்ரீபார்வதி பரமேஸ்பரராகிய இந்த கல்யாண மூர்த்தி களை தியானித்து சௌனகர் முதலிய மஹாரிஷிகளைப் பார் த்துச் சொல்லத் தொடங்கினர்.

ஹே! மஹாரிஷிகளே கேளுங்கள் பூர்வம் சகலதேவர் களும் சித்தர், அசுரர், தயித்தியர், கருடர், கின்னரர், கிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்ஞையர்,

பூதர், பசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசியர், போகபூமியர், சிவகணத்தவர் ஆகிய யிவர்களால் அட்டாங்க பஞ்சாங்கமாக வணங்கத்தக்கதாகியும் நானுவித புட்பச் செடிகள் தழைத்துப் படரப்பெற்றதும் பலவிதமான அரசவர்கமுள்ள பலங்களும் பலவகையுள்ள கந்தமூலம் உடையனவும் பலவர்ணமுடைய பலபட்சிச் சாலங்கள் தொனிகளுடன் கூடியிருந்து வாழப் பெற்றதுமாகிய ஸ்ரீகயிலாஸகிரியின் கண் நவரத்தினங்களாலிழைத்து மாற்றுயர்ந்த செம்பொன்னினு லமைக்கப்பட்டத் தளத்தினையுடையதாய் விளங்கா நின்ற ஆயிரக்கான் மண்டபத்தின் நடுவில் சிங்காசனத்தின் கண் தேவியாரோடு வீற்றிருப்பவரும், சுத்தமான படிகம் போன்றவரும், முக்குணரகிதரும், சந்திரசேகரரும், மான்மழு காளகண்ட சதுர்ப்புயதாரியரும் புஞ்சிரிப்புள்ள முகதாமரை யுடையவரும் மதுரமொழியைக் கொண்டவரும் புலித்தோலை யாடையாக வுடையவரும் சடை முடியைக்கிரீடமாகக் கொண்டவரும் திரு நீரணிந்த மேனியரும் மிகுந்த அழகையுடையவரும் நந்தி தேவரும் பிருங்கியும் இருபக்கமிருக்கப் பெற்றவருமான ஸ்ரீமஹேஸ்வர பகவான் திருவோலக்கமாவெழுந்தருளியிருக்கும் சமயத்தில் சனகாதி முனிவர்களனைவரும் பேரன்போடுமெய்பெருமானுடைய சன்னிதானத்தினின்று கொண்டு பலவித தோத்திரங்களைக் கூறத் தொடங்கினர்கள்.

ஹே! சம்போ ஹே! மஹாதேவா ஹே யானந்தத்தாண்டவா! சந்திரசேகரா! ஸ்ரீபரமானந்தசொரூபா! ஹே சம்போ! ஹே தாயாளு! ஹே கால காலா! நிராச நிற்குண சொரூபா! நின் திருவடித்தாமரைகளுக்குத் தொண்டர்களாகிய அடியேங்களுக்குச் சகாயரே இந்திரிய குணரகிதரே ஜகத் காரணரே! பார்வதி நாதா! மோட்ச தாதாவே யுமக்கு வந்தனம் புரிகின்றோம் அடியார்க்கினியனென்ற உமது திருநாமத்தை இன்று அடியேங்களுக்கு விளக்கிக் காட்டி கிருபை புரியவேண்டு மென்று வந்தனை வழிபாடுடன் தாழ்ந்து வணங்கிப் பின்னும் சொல்லுகின்றார்கள். ஹே பசுபதே! பொதிகாசலத்திலமர்ந்தருளிய அகஸ்தியர் முதலிய சப்தரிஷிகளும் தமது சன்னிதானத்தின் கண் தமது கிருபாநோக்கத்தை விரும்பிவந்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். வசிஷ்டர் பூலோகத்திற்குப் போய்த் தவஞ்செய்ய விரும்புகின்றார் ஆனதால் புண்ணிய க்ஷேத்திரம் புண்ணிய தீர்த்தங்களெவை அவைகளுக்குள் அதிசீக்கிரம் முத்தியைத் தரக்கூடிய முக்கியமான வோர் ஸ்தலத்தின் மான்மியத்தை யருளிச்செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்ட ஸனகாதி முனிவர்களைப் பார்த்து பரமசிவம் திருவாய்மலர்ந்தருளியதாவது :—

ஹே முனிவர்களே! கிழக்கு சமுத்திரக் கரையில் மல்லிகைச் செடிகள் நிரைந்த ஓர் ஸ்தலமிருக்கின்றது அத்தலத்திற்கு தேவசானித்தியபுரமென்று பேயர் அந்தத்தலத்திற் சென்று வசிஷ்டர் தவம் செய்யக்கடவது என்று

கட்டளையிட்டு நான் அத்தலத்திற்கேகி அவ்வசிஷ்ட முனிவருக்குப் பிரத்தியக்ஷமாய் இடபவாகனரூடராய் எழுந்தருளிக்]காக்ஷி கொடுக்கின்றோமென்று அருளிச்செய் தனர் அஃதை நந்திதேவர் மூலம் வழிமுறையாகவறிந் துணர்ந்த சூதபுராணிகரானவர் நைமிசவன முனிவர்களு க்குக்கூற நைமிசவன முனிவர்களனைவருங்கேட்டு மிகவும் ஆனந்த பரவசமுடைய வர்களானார்கள்.

சம்பூரணம்.

2-வது அத்தியாயம்.

சூதபுராணிகரானவர் நைமிசவன முனிவர்களைப் பார் த்துப் பின்னுங்கூறத் தொடங்கினர் ஹே மகரிஷிகளே! பூர்வம் கௌசிக முனிவர் ஸ்ரீ நந்திதேவரைப் பார்த்து சா ஷ்டாங்கமாக நமஸ்கரித்து வினவுகின்றார்கள். ஹே கரு ணாநிதியே! சர்வக்ஞரே! சர்வபூத தயாநிதியே! உமது திருவாக்கால் சகல புண்ணிய தீர்த்தங்களையும், சகல புண் ணிய ஸ்தலங்களையும், விஸ்தாரமாக கேட்கப் பெற்றவர்க ளானோம். ஆயினும் தேவசானித்திய புரத்தின் மான்மிய த்தை விரிவாகக் கேட்கப் பெறாமல் சுருக்கமாகக் கேட்கப் பெற்றோமானதால் அத்தேவசானித்திய புரத்தின் மகிமை யையும் அதிலுள்ள தீர்த்த மான்மியத்தையும் உள்ளபடி விரிவாக எடுத்துத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்ட சௌனக முனிவரைப் பார்

த்து ஸ்ரீ நந்திதேவரானவர் கருணைகூர்ந்து கூறத்தொட ங்கினர். ஹே சௌனகமுனிவரே! நீர் கேட்ட பிரச னம் அதி ரகசியமாயுள்ளது. அத்தலத்தினுடைய மான்மி யத்தை ஹம்ஸக்கொடி பிடித்த அந்தணனாலும் கூறுவதற் கொண்ணாது. ஆனதால் அத்தலமான்மியத்தின் விரிவை இரசித கிரியிலெழுந்தருளியிருந்து ஆன்மாக்களினுடைய மலவிருள்களைப்போக்கி அநுக்கிரகிக்கின்ற ஒப்பற்ற ஸ்ரீ உமாமஹேசுரரேயன்றி வேறு எவர் சொல்ல வல்லவரா வார். பூர்வம் ஸ்ரீகயிலாஸபர்வதத்தில் ஏகாந்தமாக ஸ்ரீ உமாபதியாகிய பரமசிவனானவர் எழுந்தருளியிருக்கும் சமயத்தில் அம்மையாரானவர் எம்மையாளுடைய அண்ண லாகிய புண்ணிய மூர்த்தியின் திருவடித்தாமரை மலரின் மீது விழுந்து நமஸ்கரித்து அஞ்சலியஸ்தராய்க் கைகூப்பி நின்றுகொண்டு இவ்வுலகங்களும் எவ்வுலகங்களும் உய் யும் பொருட்டு ஓர் பிரஸனம் செய்யலாயினர்.

ஸ்ரீமஹாதேவமூர்த்தியே ஜகத்திற்கெல்லாம் நாயகரே! சர்வஞ்ஞரே! குணாதீதரே! உமது திருவாக்கால் இப் பூவுலகத்திலுள்ள க்ஷேத்திரங்களின் வைபவங்களைப் பல வாறாக கேட்டிருக்கின்றேனாயினும் ஸ்ரீகாசி, ஸ்ரீபதரி காச்சிரமம், ஸ்ரீகாளத்தி, ஸ்ரீகாஞ்சி, ஸ்ரீஅண்ணாமலை, ஸ்ரீ சிதம்பரம், ஸ்ரீஆரூர், ஸ்ரீஐயாறு, ஸ்ரீகும்பகோணம், ஸ்ரீப ட்டீச்சுரம், ஸ்ரீசண்பகவனம், ஸ்ரீவிடைமருதூர், ஸ்ரீகா யாரோகணம், இவ்வகைப்பட்ட ஸ்தலமகிமைகளை அடி யாளாகிய வெனக்கு மிகவும் விரிவாக எடுத்துரைத்தீர்க

ளாயினும் அக்காயாரோகண ஸ்தலத்திற்கு மேற்குத் திசையில் மிகவும் பரிசுத்தமான அக்கினிஸாந்நித்யபுரமென்றோர் ஸ்தலமிருக்கின்றது என்று முன்னம் அடியாளாகிய எனக்குக் கூறியிருக்கின்றீர்கள். ஆனதால் அத்தலமான்மியங்களை முற்றும் விரிவாக எடுத்துரைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்ட ஸ்ரீதேவியைப் பார்த்து ஒ தேவி! மூவுலகத்திலும் மிகவும் பிரசனையடைந்த அத்தலமகிமைகளை முற்றும் யான் உன்னிடத்தில் வைத்திருந்த அன்பினால் கூறுகின்றேன் அன்பில்லாதவர்களுக்கு ஒருபோதுஞ்சொல்லவேகூடாது. முன்னொரு காலத்தில் இப்பூவுலகத்தில் பன்னிரெண்டு வருஷகாலம்வரை மழையென்பதே பெய்யாமல் மிகவும் க்ஷீணதிசையில் வந்து விட்டது. அச்சமயத்தில் இப்பூவுலகத்தில் யாதாமொரு பதார்த்தமும் இல்லாமற் போயிற்று. உலகத்திலுள்ள சகல பிராணிகளும் உண்ணத்தகாத பதார்த்தங்களையுண்டும் தின்னத்தகாதவைகளைத் தின்றும் பருகத்தகாதவைகளைப்பருகியும் உலக நிந்தைக்கும் சாஸ்திர நிந்தைக்கும் இடமுடையவர்களானார்கள்.

அச்சமயத்தில் கயிலாய பர்வதத்திலுள்ள காமதேனுவானது புல் முதலிய உணவுகளை விரும்பி பூலோகத்திற்குப்போய் பூலோகமுழுதும் சுற்றியும் புல்முதலிய உணவுகளானவை தினைபனை நேனும் காணப்பெறாமையால் தனக்கிருக்கும்மிகுந்த பசியினால் மிகவும் வருத்தங்கொண்டு ஓரிடத்தில் மரித்துக்கிடந்த ஓர் நாயின் மாமிசத்தைத்தின்று

சிறிது பசியையாற்றிக்கொண்டு உடனே இக்கயிலாயத்திலிருக்கின்ற எம்மிடம்வந்துசேர்ந்து எமக்கு அபிஷேகத்திற்குப் பால்கொடுக்கும்பொருட்டு சமீபித்தது. அப்படி சமீபித்த காமதேனுவைப்பார்த்து மிக்ககோபஞ்செய்து ஏ காமதேனுவே! நீ யிங்கே யெதற்காக வந்தனை? எக்காரணத்தாற்புசிக்கக்கூடாத அசேடத்தைப் பொசித்தாய்! ஆதலால் என் சமீபத்தில் வாராதே! அக்குற்றத்தால் நீ புலியினுருவத்தையடைந்து பூலோகத்திற்குப்போய் பலமிருகங்களையுங்கொன்று தின்னக்கடவாய் பலகானகங்களிலேயும் திரியக்கடவாய் என்று சாபங்கொடுத்தோம். அச்சாபத்தை யேற்ற அக்காமதேனுவானது மிகவுந்துக்கத்துடன் பீதியடைந்து யழுது பிரலாபித்தது. எனக்கு நித்யானந்தமான ஈசுவரதெரிசனமும் கைலயங்கிரிவர அனுக்கிரகமுமருள்வீரென மிகுந்த வணக்கத்துடன் சாபம் நீங்கும்படி சரணாகதமடைய அப்போது கிருபாநிதியாகிய ஈசுவரன் அதற்கு நாம் இரங்கி காமதேனுவைப்பார்த்து ஹே காமதேனுவே நீ யேற்ற சாபம் நீங்கும் வண்ணம் ஓர் உபாயம் சொல்கின்றோம் கேட்பாயாக வென்று ஒருபாயங் கூறினோம். அவ்வுபாயமானது பூலோகத்திற் புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தில் கிழக்கு சமுத்திரத்தின் கரையில் ஸ்ரீசிதம்பரத்திற்கும் ஸ்ரீகாவேரிப்பூம்பட்டணத்திற்குத்தென்திசையிலும் ஸ்ரீஆரூருக்கும் கிழக்கில் ஒரு யோசனை தூரத்திலுள்ளதாயும் அக்ஷயலிங்கத்திற்குக் கிழக்கே ஓர் குரோச தூரத்திலுள்ளதும் ஸ்ரீ

காயாரோகணத்திற்குமேற்குத் திக்கிலும் உள்ளதான தேவசானித்யபுரமென்ற ஓர் புராதனமான க்ஷேத்திரம் இருக்கின்றது. அத்தலத்தின் நடுவில் பலவகைப்பட்ட தேவர்களும் முனிவர்களும் பிரத்தியக்ஷமாய் வந்து வாசம் செய்ய ஹேதுவான அமிர்ததீர்த்தமென்று ஓர் தடாகமிருக்கின்றது. அதன் ழ்க்கரையில் தேனைச் சிந்தும் பூக்களையுடைய உலக பூச்சியமான அழகிய மல்லிகைச்செடிகள் நிரம்பி யிருக்கின்றது. அந்தஸ்தலத்தை நீயடைந்து மிகவும் சீதளமான அந்த தீர்த்தத்தில் ஸ்நானம் புரிந்து மணமிகுந்த அந்த மல்லிகைச் செடியின் அடிப்பிரதேசத்தில் வாசஞ்செய்வாயாக அப்படி வாசஞ்செய்வாயே யானால் ஹே! காமதேனுவே நீ யிந்த கொடிய புலியின் உருவத்தை விட்டு பண்டயவுருவத்தைப் பெறுவாயென்று நாம் கூறிய மொழியைக் கேட்ட காமதேனுவானது தேவசானித்திய நகரமென்கிற ஸ்ரீ சிக்கல்மாநகரத்தை யடைந்து அத்தலத்திலுள்ள புண்ணிய தீர்த்தத்தில் மூழ்கி மல்லிகை வனத்தடியிற் சென்றது. அவ்வடித் தலத்தைக் கண்ட மாத்திரத்தில் அக்காமதேனுவானதுபெற்ற புலியுருவமானது அகன்று பண்டய உருவமாகிய பசுவின் உருவத்தையடைந்தது அதுமுதலத்தலத்திற்கு மல்லிகை வனமென்றும் அத்தீர்த்தத்திற்கு அமிர்த தடாக மென்றும் பெயருண்டாயிற்று. காமதேனுவானது தன் மடியிலுள்ள பாலால் அக்குளத்தைப் பூரணமாக நிரப்பச் செய்தது. அக்காரணத்தாலக் குளத்திற்குப் பாற்குளமென்று உலக பிரசித்தமாயிற்று.

ஸ்ரீகாசியில் கங்கா நதியில் அறுபதினாயிரம் வருஷம் ஸ்நானம் செய்த பலத்தை இப்பாற்குளத்தில் ஒரு தரம் ஸ்நானம் செய்தவன் அடைவான். ஸ்ரீகாசியில் மறணமடைந்தவர் முக்திபெறுவார். இச்சிக்கல் என்னும் நகரத்தில் எழுந்தருளியிருக்கும் எம்மைத் தெரிசித்தோர்க்கு முக்தி கிடைக்கும். இப்பாற்குளத்தின் கரையில் பிதிர் தேவதைகளுக்குச் சிரார்த்தம் கொடுப்பவன் பதினாயிரந் தடவை கயாவில் சிரார்த்தம் செய்த பலனையடையா நிற்பன் கயாவிலுள்ள வடவிருக்ஷத்தை இக்குளக்கரையிலுள்ள மல்லிகைச் செடியானவை ஒவ்வொன்றும் ஒத்துநிற்கும். இக்ஷேத்திரமானது கயாவினும் பதினாயிரம் பங்கு உயர்வையுடையது. இத்தன்மைபொருந்திய அந்த க்ஷேத்திரத்தில் காமதேனுவானது வாசஞ்செய்து கொண்டிருந்தது என்று பார்வதியைப் பார்த்து பரமேஸ்வரரானவர் திருவாய் மலர்ந்தருளினார். இப்படியருளிச்செய்திருக்கும் சமயத்தில், உத்தம ரிஷியாகிய வசிஷ்ட ரிஷியானவர், சிவபூசை யக்கினிஹோத்திர முதலிய காரியங்களைச் செய்ய உத்தேசித்து காமதேனுவை தமக்குப் பணிவிடை செய்யும் வண்ணம் கேட்க விரும்பி ஸ்ரீகயிலாயத்தி லெழுந்தருளிய ஸ்ரீ பரமேஸ்வரரை யடைந்து தமது சன்னிதானத்திற்றண்டு போல் விழுந்து வணங்கி எழுந்து நின்று கொண்டு பலவாறாகத் தோத்திரம் செய்து தமது கருத்தை வெளியிட்ட வசிட்ட முனிவரைப்பார்த்து ஸ்ரீகயிலாய பதியானவர் ஓ! வசிஷ்டரிஷியே! நீ கேட்கும் காமதே

னுவானது பூலோகத்தில் கிழக்கு சமுத்திரக் கரையில் காயா ரோஹணத்தலத்திற்கு மேற்றிசையில் அமர்ந்த ஸ்ரீசிக்கல் க்ஷேத்திரத்தில் வாசம் செய்து கொண்டிருக்கிறது. நீயும் அவ்விடத்திற்குச் சென்று அரிய தவத்தை செய்யக்கடவாய் அப்படிக்கு நீ செய்த தவப்பயனால் அக்காமதேநுவை உமக்குக் கொடுக்கக் கடவோமென்று ஸ்ரீ பார்வதிபதியாகிய பரமேஸ்வரனுர் கட்டளை யிட்டார். இட்ட மாத்திரத்தில்அக்கட்டளையை வசிஷ்ட ரிஷியானவர் சிரமேற்கொண்டு தேவஸாந்நித்திய புரமென்கிற ஸ்ரீ சிக்கல்மாநகரையடைந்து பாற்குளத்தில் ஸ்நானம் செய்து அம்மல்லிகை விருக்ஷத்தினடியில் தமக்கு வாஸஸ்தானமாக ஓர் ஆச்சிரமமைத்துக் கொண்டு அவ்விடத்திற்றுனே வசித்து வந்தார். தமமுடைய ஆச்சிரமத்திற்கு குணபாரிசத்தில் சிவலிங்கத்திற்கு ஆதாரமாகிய இலிங்க பீடத்தைச் சாஸ்திர லக்ஷணங்களுக் கமைந்த இலிங்க பீடவேதியாக அமைத்து வைத்துக் கொண்டு முன்னமே யவ்விடத்தில் வசித்துக் கொண்டிருக்கும் காமதேனுவின் பாலை பூஜைக்காக கடைந்து எடுக்கப்பட்ட வெண்ணெயை சிவலிங்காதாரமாகச் செய்து பூஜித்துக்கொண்டு வந்தனர். பூஜா சமயத்தில் ஸாக்ஷாத்காரசைதன்னிய பகவானுன ஸ்ரீபரமேஸ்வரரானவர் ஜோதிலிங்க வடிவமாய் ஸஹஸ்ரபூர்ணசந்திர பிரகாசமான அதிசீதளத்துடன் அதிசீதளபிராகரசராய் ஜடாமகுடத்தை யுடையவராய் பாதாளமேழினிக்கு மப்பாலு நீண்ட திருவடித் தாமரையை யுடையவராய் வசிஷ்ட மஹரிஷிக்குத் தரிசனங் கொடுத்தருளினர்.

அப்பொழுது தேவர்களுக்கெல்லாந் தேவனாயிருக்கின்ற பரமசிவனைத் தரிசனம் செய்யப் பெற்ற வசிஷ்டரிஷியும் அஞ்சலியஸ்தராய் நடுக்குற்ற வாக்குடன் ஆனந்தங்கொண்டவராய் பரவசமடைந்தவராய்த் தோத்திரம் செய்யத் தொடங்கினர். ஹே! தேவதேவனே! போற்றி உலகமெய்திய பவத்திறத்தைப் போக்கடிக்கப்பட்டவரே! போற்றி, அவ்வியக்தரே! போற்றி, சர்வஞ்ஞரே போற்றி, திரிசூலியே! போற்றி, சங்கரரே! போற்றி, சிருட்டியாதிமுதலியபஞ்சகிர்த்தியங்களை விநோதமாகச்செய்யக்கூடியவரே! போற்றி, தேவதேவரே! போற்றி, தேவர்களால் பூஜிக்கப்பட்ட திருவடியையுடையவரே போற்றி, சம்புவே போற்றி, ஒரு சமயத்தில் விஷ்ணுவை களத்திரமாகச்செய்துகொண்டவரே! போற்றி, கங்கையைச் சடையிற்றரித்தவரே! போற்றி, சந்திரனைச் சடையிற், கொண்டவரே! போற்றி சோமசூரியஅக்கினியாகிய திரிநேத்திரங் கொண்டவரே! போற்றி, கருணைக்கிருப்பிடமானவரே! போற்றி, கங்காள போற்றி, திருநீறணிந்த மேனியையுடையவரே! போற்றி, நாகாபரணரே! போற்றி, இடபத்துவசரே போற்றி, சகல தேவர்களுக்கும் பிரியமுடையவரே! போற்றி, மறைகளால் அறியப்படாதவரே! போற்றி, விமலரே! போற்றி, கிருபாநிதியே போற்றி, பக்தர்களுக்கு அபயங் கொடுத்தருள் செய்பவரே! இஸ்தல சிக்கலில் சிக்கிநீரோ வெண்ணேசா போற்றி, போற்றி, போற்றி யென்று பலவாறாகத் தொழுது

துதித்து நின்ற வசிஷ்டமுனிவரைப் பார்த்து ஸ்ரீ பரமசிவ மானவர் கம்பீரமான வாக்கோடு ஓ வசிஷ்ட முனிவரே! நீர் நம்மை செய்த பூஜையினாலும் இத்தலத்தின் மஹத்துவத்தாலும் நாம் மிகுந்த சந்தோஷத்தை யடைந்தோம். நீர் உம்முடைய மனத்திலிருக்கும் இஷ்டமான வரத்தைக் கேட்டுக்கொள்ளும் நாம் தருகிறோமென்று திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்ட அவ்வசிஷ்ட ரிஷியும் மஹாதேவரே! அவ்விடத்திய திருவடிப் பூஜையடியேன் செய்துய்யும் பொருட்டுக் காமதேனுவை யெனக்குக் கொடுத்தருள வேண்டும் இந்த வெண்ணெலிங்கத்தில் எப்பொழுதும் பிரத்தியக்ஷமாகித் தரிசனை செய்கின்றவர்களுக்குக் காட்சி கொடுத்தல் வேண்டும். இத்தலத்தின் கண் வாசம் செய்கின்றவர்களுக்குப் பாபங்களைப் போக்கிப் புண்ணியங்களை வளர்த்தி வைக்கவேண்டும். இத்தலத்திற் பிறந்தவர்களுக்குப் பாபலேசமே கிடையாது என்று அனுக்கிரகிக்க வேண்டும், இன்று முதல் இத்தலத்திற்கு வசிஷ்டாச் சிரமமென்ற நாமதேயமும் பிரத்தியக்ஷமாய் விளங்கவேண்டும் என்று அஞ்சலியஸ்தராய் வணங்கிக் கேட்டுக்கொண்ட வசிஷ்டரைப்பார்த்து ஹே வசிஷ்ட முனியே! நீ கேட்டுக் கொண்டவை யெல்லாம் இப்பொழுதே யனுக்கிரகித்தோமென்று திருவாய் மலர்ந்தருளிக் காமதேனுவையும் அவரிடம் அளித்து அனுக்கிரஹம் புரிந்து அந்த வெண்ணெலிங்கத்தின் கண்ணே மறைந்தருளினார்.

வஷிஷ்டரிஷியும் அச்சிக்கலென்னும் க்ஷேத்திரத்தின் கண்ணே! நித்தியமாக வாசஞ்செய்து கொண்டிருந்தன ரென்று ஸ்ரீரமாதேவிக்கு ஸ்ரீ பரமபதியாகிய பரமசிவனார் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம் ஸ்ரீநந்தி தேவரானவர் சௌனக முனிவருக்குச் சொன்ன சரித்திரத்தை முறை யோடறிந்த சூதமஹா ரிஷியானவர் நைமிசவன மஹாரிஷி களுக்குக் கூற ரிஷிகளனைவரும் பேரானந்த சொரூபரே யானார்கள்.

சம்பூரணம்.

3-வது அத்தியாயம்.

பின்னும் சூதபுராணிகரானவர் நைமிசவன மஹாரிஷி களைப் பார்த்துக் கூறத்தொடங்கினார். ஹே மஹாரிஷிகளே! பூர்வம் சௌனக மஹாரிஷிகளுக்கு ஸ்ரீநந்திதேவர் கூறிய வண்ணம நானுங்களுக்குக்கூறுகிறேன். கேட்பீர்களென்று கூறுகின்றார். முன்னொரு காலத்தில் ஸ்ரீகயிலாஸ கிரியில் ஸ்ரீபரமசிவத்தைப் பார்த்து வணங்கி நின்று ஹே தயாளு வே! மறுபடியும் சிக்கல் ஸ்தல மான்மியத்தை யருளிச் செய்ய வேண்டு மென்று பிரார்த்தித்த மாத்திரத்தில் ஸ்ரீ கருணா நிதியாகிய பரமபதியானவர் கூறுகின்றார்.

ஹே மாதுசிரோன்மணி! முன் திரேதாயுகத்தில் விஸ் வாமித்திர ரிஷியானவர் தென் கடற்கரையில் ஒரு பக்கத் தில் உக்கிரமான தவஞ்செய்துகொண்டிருந்தார். அத்தவ த்தின் பலன் எப்படியோ எதற்காக இப்பேற்கொத்த தவ

த்தைச் செய்கிறாரோ வென்று பயந்து திரிலோகாதிபதி
யான இந்திர தேவனும் தன்னைச் சூழ்ந்த பரிவாரங்களா
கிய சகல தேவர்களையும் அழைத்து கூட்டிவைத்துக் கொ
ண்டு ஒரு ஆலோசனை செய்து க்ஷணத்திற்குள் சகல லோ
கத்தையும் தன் வசப்படுத்துவதில் மிகவும் வல்லமையை
யுடைய திலோத்தமை என்னும் அப்ஸரஸ்திரியை வரவ
ழைத்து ஹே மாதே! விஸ்வாமித்திரர் தவஞ்செய்கின்
றார். அவர் தவம் செய்துவரும் தென் கடற்கரையின் கண்
சென்று அவர் செய்யும் தவத்தை கெடும்படியான தந்தி
ரத்தைச் செய்து அவ்விஸ்வாமித்திரர் தவத்தை யழித்து
வரவேண்டியதென்று ஆக்யாபித்த ஆக்கினியை யத்திலோ
த்தமையானவள் சிரமேற்கொண்டு அவ்விஸ்வாமித்திரமுனி
வர் தவஞ்செய்யும் இடத்திற்குச் சென்று அத்தவமுனி
முன்னே நின்றுகொண்டு, சப்த சுரத்தாலமையப்பட்ட
கானங்களைப் பாடியும் பரத சாஸ்திர விதி பிறழாது நாட்
டியங்களை நடித்தும் அனேக வித லீலைகளையும் செய்தாள்.
உடனே அந்த விஸ்வாமித்திர ரிஷியும் இத்திலோத்தமை
செய்த அனேக வித லீலையாலும் அனேக வித தந்திரத்தி
னாலும் அவளுக்கு வசப்பட்டு நெடுங்காலம் அவளுடன்
கூடி வாழ்ந்து வந்தனர். அவளோடு பலவாறாக லீலை விளை
யாட்டை விளையாடி தாம் கொண்ட தவத்தையும் இழந்
தார். அதோடு தம்புகழையும் இழந்தவராயினர்.

பின்பு நெடுநாள் சென்றபிறகு திலோத்தமையும்
தெய்வலோகம் போய்ச் சேர்ந்தாள். அத்திலோத்தமை
தன்னை பிரிந்தமாத்திரத்தில் விஸ்வாமித்திர முனிவரான

வர் ஆ! ஆ! என்ன காரியம் செய்தோம். தவத்தை யெல்லாமிழந்து உலகத்தாரும் தேவர்களும் தூஷிக்கப் பாத்திரவாதி யானேனே என்று விசாரப்பட்டு பிறகு இதற்கு பிராயச்சித்தம் புண்ணியஸ்தல யாத்திரை செய்வதே யென்று தம்மனத்திற் தீர்மானித்துக்கொண்டு அனேக புண்ணியஸ்தலங்களை யடைந்து ஸ்ரீசைளமென்னும் மஹா சிவக்ஷேத்திரத்தின் கண்ணே சேர்ந்தார். அவ்விடத்தில் வாசஞ்செய்யும் உத்தமரான வாமதேவ மஹரிஷியைக் கண்டனர். அவரிடத்தில் தனக்கு உண்டான தவக்குறைவையும் உலக நிந்தையையும் நடந்தவாறு மறைக்காமல் மிக்க விசனத்தோடு தெரிவித்துக்கொண்டார். அதைக்கேட்ட வாமதேவ மஹாரிஷியும் விஸ்வாமித்திரரிஷியைப் பார்த்து நீர் விசனத்தை இன்றோடே விட்டுவிடும். சிதைந்துபோன உம்முடைய தவமும் தீர்த்த யாத்திரையாற் கூடிவரும். அதிலும் தேவசானித்தியபுரமென்றும் திருச்சிக்கலை நீர் அடைந்து தெரிசித்தால் உம்முடைய தவம் முன்னிலும் பதின்மடங்கு அதிகமாகவேவளர்ந்தோங்கும். நீர் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாமென்ற வாமதேவ மஹரிஷியின் வாக்கைக் கேட்ட விஸ்வாமித்திர முனிவரானவர் மிகுந்த ஆவலையுடையவராய் தேவசானித்தியபுரமென்பது பூமியில் எந்தபாகத்திலுள்ளது. அதினுடைய மகிமை யெப்பேர்ப்பட்டது. அதைை யெனக்குத் தெள்ளிற்றெறிவித்தல் வேண்டுமென்று வினவிய விஸ்வாமித்திர முனிவரைப் பார்த்து வாமதேவ மஹரிஷியானவர் கூறுகின்றார்.

தேவசானுத்திய நகரமென்கின்ற சிக்கில் சிவக்ஷேத்தி ரமானது கிழக்குச்சமுத்திரக்கரையில் காயாரோஹணஸ்த லத்திற்கு மேற்குத் திசையிலுள்ளது. அங்கே சகல தேவ ர்களும் வசிக்கின்றார்கள். அஃது மிகவும் பரிசுத்தமான ஸ்தலம். அடைந்தோர் பாபத்தை யன்றேயகற்றியருளும். அந்த க்ஷேத்திரத்திற் செய்த தவம், ஜெபம், ஓமம், தா னம், பூஜையாகிய சகலமும் குறைவற்ற பலனைக் கொடுக் கும். இதர இடங்களிற் செய்த பலன்களைக் காட்டிலும் ஆயிரம் பங்கு உயர்வுள்ளதாயும் ஆகும். ஆதலால் நீர் அவ் விடம் சென்று தவம் செய்து வேண்டிய சித்தியைப் பெற் றுக்கொள்ளுமென்று கூறிய வாமதேவ மஹரிஷியின் வா க்கியத்தைக் கேட்ட மஹா புத்திமானான விஸ்வாமித்திர முனிவரும் தேவசானித்திய புரமென்கிற சிக்கில் ஸ்தலத் தையடைந்து நவனீத ஈஸ்பரனைத் தரிசினம் செய்து பாற்கு ளத்தில் ஸ்நானம் செய்து மகிழ்ச்சியோடு வசித்து வந்தார். சிலகாலம் சென்றதும் அவ்வெண்ணெலிங்கேசுரர் திருக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிற இடத்திற்கு வட திசையில் ஓர் தீர்த்தம் உற்பத்தி செய்து அதன் கரையில் ஓர் அரசும்ஸ்தாபித்து அவ்விடத்திற்றபம் செய்து பழய தவத்தினும் பதின்மடங்கு தவத்தை யடைந்து வாழ்ந்து வந்தார்.

இவ்விதமாக உமாதேவிக்கு ஸ்ரீபரமசிவம் கூறியருள அஃதை வழிமுறையாக யறிந்துணர்ந்த சூதபுராணிகர் கூற நைமிசவன ரிஷிகளனைவரும் கேட்டு மிகவும் பேரான ந்தத்தை யடைந்தார்கள்.

சம்பூரணம்.

4 வது அத்தியாயம்.

கேளும் சௌனகமுனிவரே என்று ஸ்ரீ நந்திதேவரானவர் வேறுமொரு திவ்விய சரித்திரத்தைக் கூறத்தொடங்கினர். பூர்வம் ஸ்ரீ பரமசிவனனவர் ஸ்ரீ உமாதேவியைப்பார்த்து ஹே தேவீ! சிக்கல் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் இன்னும் ஓர் மஹாத்மியத்தை எடுத்து விளம்புகிறேன். நீ அன்போடு கேட்பாயாகவென்று திருவுளங்கொண்டு சொல்லத்தொடங்கினர்.

பூர்வம் விந்தியபர்வதத்தைப் பாதாளத்தில் அழுந்தச்செய்தவரும் ஸமுத்திர ஜலத்தை யுளுந்தளவாக்கி யெடுத்தருந்தியவரும் அங்குஷ்டபிரமாணமுடையவரும் கலசத்திற் பிறந்தவரும் பலவித சித்துக்களைக் கைப்பற்றியவருமான அவ்வகஸ்திய முனிவரானவர் பொதிகைமலையிலிருந்து வடதிசையை நோக்கிவருஞ் சமயத்தில் கார்த்தியாயனர் முதலான மஹரிஷிகளானவர் அவ்வகத்திய மஹாரிஷியைக் கண்டார்கள். கண்டவுடனே பொதிகைவாசனுகிய அவ்வகத்திய முனிவரை வணங்கித் தோத்தரித்து ஹே கிருபாநிதியே! ஹே அருட்கடல் நாதா! நாங்களெல்லோரும் இவ்விடத்திற்றனே யாகாதி காரியங்களான சத்காரியங்களைச் செய்துகொண்டு சுகமாகவேயிருந்து வருகின்றேம். இப்படிக்கிருக்குமெங்களை மிகவும் கொடுமையையடைந்த கொடிய கசடர்களாகிய வாதாபி, வில்வலன் என்கின்ற இரண்டு சகோதரர்களாகிய அசுரர்கள் எங்களுடைய யாகசாலையின்கண் வந்து புகுந்துகொண்டு அவர்

களில் வாதாபி யென்கிற கொடியவனுவன் நாங்கள் பிராம் மணபோஜனத்திற்காக அமைத்து வைத்திருக்கின்ற அன் னங்களில் மறைந்துயிருந்துக்கொண்டு, பிராமண சந்தர்ப் பணமாகிற முடிவில் பிராமணர்களுடைய உதரத்தில் இரு ந்துகொண்டு உபாதி செய்கிறுன்.

மற்றொருவனுன வில்வலன் உயர்ந்த சத்தத்தோடுங் கூப்பிடுகிறுன். அச்சமயத்தில் அவ்வாதாபி யென்னும் கொடியவன் அப்பிராமணர்களுடைய வயற்றைக்கிழித்துக் கொண்டு வெளியில்வந்து இருவருங்கூடி சகல அன்னங்க ளையும் பட்சித்துவிடுகிறுர்கள். ஆதலால் எங்களுக்கு நாசம் வந்துவிடுகிறது. நாங்கள் எக்கிய அனுட்டான முத லிய காரியங்களைச் செய்யக்கூடவில்லை. இந்தவித உபாதி யை நீக்கியருளவேண்டும் சுவாமிகளே யென்று கூறிய முனிவர்கள் வாக்கியங்களைக்கேட்டு அகஸ்திய மஹாரிஷி யுங் கூறுகின்றுர்.

ஹே முனிவர்களே! நீங்கள் எக்கியங்களைச் செய்யு ங்கள் நான் இவ்விடத்திலேயே யிருக்கின்றேன் என்று திருவாய்மலர்ந்தருளிய அகஸ்தியர் வசனத்தைக்கேட்ட கார்த்தியாயனரே முதலிய ரிஷிகளனைவரும் ஒன்றுகூடி அவர்கள் செய்துவரும் யாகங்களைச் செய்யத்தொடங்கி ஞர்கள்.

பிராமணுள் சமாராதனைக்காக பர்வதாகாரமாக அன் னங்களையும் சாகாதிகளையும் நானுவித பக்ஷணங்களையும் பாகம் செய்துவைத்தார்கள்.

அவைகளனைத்தையும் அகஸ்தியமுனிவரானவர் ஸ்ரீ உமாபதியான பரமசிவத்தைத் தியானித்து அங்குள்ள அன்னங்களைப் புசித்தனர்.

அச்சமயத்தில் மஹாபாபியான வில்வலனானவன் தன்னுடைய தமையனாகிய வாதாபியை ஓங்கிய சத்தத்தோடு கூப்பிட்டான். அச்சமயத்தில் மஹா தபோ பலத்தையுடையவராகிய அகஸ்திய மஹாரிஷியானவர் தன் வயற்றிலிருந்த வாதாபியைக் கையினால் தன் வயற்றைத் தடவி பஸ்பமாகச் செய்தனர். அப்படிச்செய்த பிறகு, வெளியிலிருந்த வில்வலனென்ற கொடியவனையும் உங்கார சப்தஞ்செய்து பஸ்பமாக்கிப்போட்டு, உடனே அக்கார்த்தியாயனாதி முனிவர்களுடன் இத்திருச்சிக்கல் என்னும் க்ஷேத்திரத்தை யடைந்தனர்.

அடைந்து அப்பதியின் கண்ணுள்ள பாற்குளத்தில் ஸ்நாநம்செய்து ஸ்ரீ நவநீதேஸ்வரனை தெரிசித்து பக்தியுடன் சாஸ்திர விதிப்படி பூசித்து தாமடைந்திருந்த பாபக் கிலேசத்தினின்று நீங்கினார்கள். அவ்வெண்ணைலிங்கப் பெருமான் திருக்கோயிலுக்கும் தென்திசையில் ஓர் பாணம்விக்ஷ தூரத்தில் ஓர் சிவலிங்க பிரதிஷ்டை செய்து தீர்த்தமும் உண்டுபண்ணி அதன் கரையில் பர்ணசாலைகளையும் உண்டுபண்ணிக்கொண்டு அவ்விடத்திற்றானே வாசம் செய்துகொண்டு வந்தார்கள்.

ஹே பார்வதி அந்த அகஸ்தியலிங்கத்தை தெரிசித்தவர்களுக்கு புசிக்கக்கூடாத பதார்த்தத்தைப் புசித்த பாவமும், மற்றுமுள்ள கொடிய பாபங்களும் நிவர்த்தியாகி

மஹா பரிசுத்தத்தைப் பெற்றவர்களாவாரென்று கூறி பின்னுங்கூறுகின்றார்.

ஹேமக்கொடிபோன்ற நடங்கிய இடையையுடையவளே! அங்கயற்கண்ணியே! மலையரயன் தவத்தின்கணுதித்த மாணிக்கவல்லியே! கேட்பாயாக, அவ்வகத்திய பரிபாலிக்கப்பட்ட கார்த்தியாய முனிவரும் வெண்ணெலிங்கப்பிரானுக்குக் கிழக்கே சிறிது தூரத்தில் ஓர் சிவலிங்க பிரதிஷ்டையும் ஓர் தீர்த்தத்தையும் ஸ்தாபித்து அவ்விடத்தில் வாசம் செய்துகொண்டு வந்தனர்.

மற்றுமுள்ள ரிஷி தபோதனர்கள் பலரும் வாசம் செய்கின்றார்கள். நவநீதேஸ்வரருடைய திருக்கோயிலுக்கும், அக்கினிதிக்கில் பார்வதீஸ்பரமென்று உன்னால் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் இலிங்கமும் இருக்கிறது அவ்விலிங்கத்தைத் தரிசிக்கின்றவர்களுக்கு அவமிருத்தியுவானது விலகிப்போகும். இந்த தேவசான்னித்தியபுரத்தில் வசிப்பவர்களுடைய சகல பாபங்களும் தொலைந்துபோகும். இக்ஷேத்திரத்தில் அரைநிமிஷம் வரையும் வசித்திருந்து மறுபடி வேறு எவ்வித ஸ்தலத்திற்குச் சென்றாலும், சென்று அவ்விடத்தில் மரித்தாலும் அவர்களுடனே சிவபதவியையடைவார்கள். ஓர் சமயம் இத்தலத்தில் வசித்திருக்கும் வசிஷ்ட மஹாரிஷியை, குட்டரோகி, துர்கந்தனன், சொத்தைப் பல்லன், சொத்தை நிகத்தன், பொன் திருடி, ஆகிய பஞ்சமஹாபாதகர்களாகிய ஐந்துபேரும் அவ்விடத்திற்கு வந்து அகஸ்திய மஹாமுனிவரைப் பணிந்து சுவாமி நாங்கள் பூர்வம் செய்த கருமபலத்தால் இவ்வித கஷ்டத்

தை யடைகிறோம் இக்கஷ்டத்தை நீக்கி எங்களைக் காப்பாத்தல் வேண்டுமென்று வணங்கிக்கேட்டுக்கொள்ள அவ்வார்த்தையைக் கேட்ட மஹாரிஷியானவர் மிகவும் மனமானது இரக்கங்கொண்டு அப்பாவிகளைப்பார்த்து நீங்கள் பூர்வம் குருபத்தினியைப் புணர்ந்தும், பிரம்மஹத்தியின் கணகப்பட்டும், கோட் சொல்லியும், கள்ளுண்டும், பொன்திருடியுமுள்ளவர்களாகிய நீங்கள் ஐந்துபேரும் நீங்கள் செய்த பாபகர்மத்தால் நரகாக்கினியில் நெடுநாள் விழுந்துகிடந்து அந்த பாப சேடத்தால் இம்மானிடப்பிரவியை யடைந்தீர்கள். அவ்வித பாபகர்மங்களெல்லாம் அடியோடேயற்றுப்போக உங்களுக்கு விருப்பமிருந்தால் நீங்களனைவரும் திருச்சிக்கல் நகரத்தை யடைந்து நவநீதேஸ்வரனைத் தரிசனம் செய்யுங்கள் என்று வசிஷ்ட முனிவரானவர் கூற அவ்வாக்கைத் தலையின்மேற்கொண்டு ஐந்துபேரும் அச்சிக்கல் க்ஷேத்திரத்தை யடைந்து நவநீதேஸ்வரனைத் தரிசித்தார்கள்.

உடனே மேற்கண்ட பாபவினையினுற் சம்பவித்த ரோகங்களானவை நீங்கி மிகவும் சுந்தரவடிவத்தைப்பெற்று சர்வஐஸ்வரியங்களையும் அடைந்து இவ்வுலகத்துப் போகபாக்கியங்களை யெல்லாம் அநுபவித்து சரீராந்தகாலத்தில் ஸ்ரீ கயிலாயத்தில் எழுந்தருளியிருந்துகொண்டு சகல ஆன்மகோடிகளுக்கும் அனுக்கிரகம் புரிந்து கொண்டிருக்கிற எமது பெருமானுகிய சாட்சாத்கார பரமசிவத்தின்றிருவடித்தாமரை மலரின்கண் இரண்டறக்கலந்தார்கள்.

ஆனதால் இத்தலத்தில் பரமசிவனார் சன்னிதானத்தில் அன்னதானம் செய்கின்றவர் அவ்வன்னத்தின் எண்ணினும் அநேககோடிபங்கு அதிகமான காலம் வரைக்கும் அச்சிவலோகத்தின்கண் வசிப்பார்கள்.

வெய்யற் காலங்களில் சீதளமான தண்ணீர் பந்தல் வைத்து இத்தலத்தில் தீர்த்ததான செய்கின்றவர்கள் சிவசாயுச்சியம் பெறுவார்களென்று ஸ்ரீ உமாதேவிக்குச் சிவபிரான் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் நானுங்களுக்கு கூறினேன். ஹே முனிவர்களே! என்று சூதபுராணிகரானவர் கூற அஃதைச் செவிக்கு அமிர்தமெனக்கேட்ட நைமிசவன முனிவர்களனைவரும் மிக்க பரமானந்த நிருத்தனாகிய எமது பரமதயாளுவினுடைய திருவடியின்கண் பதிந்த மனமுடையவர்களாய்கேட்டு மகிழ்ந்தவர்களானார்கள்.

5-வது அத்தியாயம்

இவ்வாறாகக் கூறிக்கொண்டுவந்த சூதமஹா முனிவரைப்பார்த்து நைமிசவன முனிவர்களானவர் பரமானந்தமுடையவர்களாய் பின்னுமோர் திவ்விய சரித்திரத்தைக் கேட்க மிக்க விருப்பமுடையவர்களாகவிருக்கிறோமென்று கூற சொன்னயத்தோடு மிகவும் உன்னதமாகச் செப்பத்தொடங்கினார்.

ஹே முனிவர்களே! பூர்வம் ஸ்ரீ நந்திதேவரைப் பார்த்து சௌனக முனிவர் கூறுகின்றார். ஹே நாதா! சிவ

பெருமான் செய்தருளிய திரிபுரதகன காலத்தில் எம்பெருமானுகிய முக்கண் மூர்த்தியைத் தருமவிடையாகத்தாங்கி முப்புரத்தையும் நகைத்து எறிக்கும்வண்ணஞ் செய்த பகவானே, உலகங்களுக்கு அனுக்கிரகத்தைப்புரியப்பட்ட ஸ்ரீ நந்திதேவரே! முன்னம் மொழிந்த சிக்கல் திருநகரத்தினுடைய மான்மியத்தையும், அத்தலத்திலெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ வெண்ணெலிங்கீஸ்வரர் மஹிமைகளையும் அத்தலத்திற் புகுந்த மாத்திரத்தில் பிர்ம்மஹத்தி தோஷ முதலிய தோஷங்களெல்லாம் நீங்கிவிடுமென்ற பிரஸ்னையையும் இன்னும் விரிவாகவெடுத்துக் கூறவேண்டுமென்று கூறிய செளனக முனிவரைப்பார்த்து ஸ்ரீ நந்திதேவரானவர் பின்னும் சொல்லுகிருர்.

ஹே செளனக முனிவரே! கேட்பீராகவும் முன்னெருகாலத்தில் ஸ்ரீபார்வதிதேவியாரைப்பார்த்து பரமேஸ்வர பகவான் திருவாய் மலர்ந்தருளிய அதிரகசியமான கதையாகும்; அக்கதையை யாமுங்களுக்கு இப்பொழுது எடுத்துப்புகலுகின்றேம் கேட்பாயாகவென்று ஸ்ரீநந்திதேவர் கூறியவண்ணம் சூதபுராணிகரானவர் நைமிசவன ரிஷிகளைப்பார்த்து மிகவும் மொப்பத்தோடு செப்பமாகச் செப்பத்தொடங்கினர்.

பூர்வம் அயோத்தியா நகரத்திற்கு அதிபதியான முசுகுந்த சக்கரவர்த்தியானவர் மிகுந்த பலாட்டிகராய் ஒளி தங்கிய மணிமகுட கேட கேயூரமணிந்த அங்கத்தையுடையவராய்த் தான் பிறந்த சூரியவம்சத்திற்கேற்ப ஏகசக்கராதிபதியாய் அரசு நடத்திக்கொண்டுவந்தார். அந்த சக்கர

வர்த்தியானவர் ஒருநாள் வேட்டையாட விருப்பமுள்ளவ ராய் வேட்டைக்கோலத்தோடும் ஒரு பெரிய அரண்யத்தை ப்போய்ச் சேர்ந்தார். அவ்வரண்யத்திலுள்ள புலி முதலி ய கொடிய மிருகங்களையெல்லாம் பலவாறாக வதைத்து வேட்டையாடுதலையே விளையாட்டாகக் கொண்டவராய் வேட்டையாடியும் சூரிய அஸ்தமனமாகிய காலங்கூட தெரி யாமல் வேட்டையாடி அன்றிரவெல்லா மவ்வரண்யத்தின் கண்ணே இருக்கும் வண்ணம் நேர்ந்தது. அவ்வாறு அவ்வரண்யத்திலன்றிரவு தாமசித்திருந்து விடியற்காலத் தில் அதிக வேகத்தையுடைய வோர் புரவியின்மேல் ஏறி க்கொண்டு தன்னுடைய நகரத்தை நோக்கிச் செல்லும் சமயத்தில் நடுவழியில் மிகவும் நித்திரையோடும் சயனித் துக்கொண்டிருந்த பிராமணனைப் பாராமல் தன் குதி ரையின் காற்கொழும்பால் மிதிக்க பிராமணன் மரணம டைந்துப்போக அதனையும் நோக்காது அதிசீக்கிரமாக தன்னுடைய நகரத்தையடைந்தான். அந்தச்சமயம் தன் னுடைய ராச்சிய விருத்தாந்தங்களையும் போஜனாதிகளையும் தமக்குள்ள சிரமத்தால் சுருக்கமாய் முடித்துக்கொண்டு அன்றிரவு பள்ளியறைக்குஞ் சென்று பஞ்சண மெத்தை யின் மேற்படுத்துக் கொண்டிருந்தான். அச்சமயத்தில் கொரோமான பயத்தையுண்டு பண்ணும்படியான பெரிய ஒருருவமானது அரசனுக்கு எதிரில் வந்து நின்று கொண் டு அரசன் மிகுந்த திகிலையடையும்படிக்கும் பெரிய சப்த த்தோடும் ஆர்ப்பரித்து அதட்டியது, அந்த சப்தத்தைக் கேட்டு அரசனும் விழித்துக்கொண்டு தமக்கு முன்னிலே

இருண்ட உருவத்தோடும் ஓர் மலையைப்போல நின்று கொண்டு அதட்டுகிறதும் உறுமுறதுமாவிருக்கிற பிரம ஹத்தியைக்கண்டான். கண்டவுடனே மிகவும் பயந்து பின்பு ஆலோசிக்கலானான்.

இப்பிரமஹத்தியானது நம்மைக் கிட்டுவதற்கு நாம் யாது காரியம் புரிந்தோம். இப்பிரமஹத்தி நம்மை வந்து சேர்ந்ததற்குக் காரணமென்ன நான் க்ஷத்திரியர்களுக்குச் சுதர்மமான விலங்கு முதலிய ஜீவன்களைத்தானே கொன்றேன். இஃதென்ன விபரீதமென்று வெறுவி தனது சந்தேகமானது தீரும்பொருட்டு தன்னரசுக்குறிய குலமந்திரிகளை வரவழைத்து தனக்கு நேரிட்டிருக்கும் சங்கதியை உடனே அம்மந்திரிகளுக்குக் கூறினான்.

அம்மந்திரிகளும் அக்கணமே பல சாஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு வந்து பலவாறாக பரிசோதனை புரிந்து உடனே சங்கதியைத் தெரிந்துகொண்டு ஓ மகாராஜாவே! நீங்கள் வேட்டைக்குப் போய்த்திரும்பி வருங்காலத்தில் வழியில் சயினித்து நித்திரை செய்துகொண்டிருந்த பிராமணனை தாங்கள் ஏறிக்கொண்டு வந்த குதிரையானது தனது காலடியால் மிதித்துக்கொன்று விட்ட தோஷமாகும். அவ்விதம் தாங்கள் புத்தி பூர்வமாக செய்ததல்ல அஞ்ஞானத்தாற் சம்பவித்தது. இப்பிரமஹத்தியானது பாபங்களுக்குள் மிகவும் கொடிய பாபகரத்தையுடையது. ஆனதால் மஹா புண்ணியவான் என்கிற கண்ணியவானே! தங்களைக் கூடப்பிடிக்கத் தலைப்பட்டு பிடித்துப் பீடிக்கி

ன்றது. ஓ மஹாப்பிரபுவே! இதை நிவர்த்திக்க ஓர் உபாய மிருக்கிறது.

அதாவது வேதமாகிய வித்தையினலும் பக்தியினலும் மிகவும் தென்னத்தெளிய தேர்ந்திருக்கிறபிராம்மணோத்தமர்களையும் தங்கள் குலாச்சாரியரான வசிஷ்ட மஹாரிஷியையும் வரவழைத்து அவர்களிடம் இவ்விஷயத்தை யறிவித்துக்கொண்டால் அவர்களால் சாந்தியாகிய கருமங்களாலும் மந்திரங்களாலும் இப்பிரமஹத்தியைத் தொலைக்கக் கூடும் என்று விண்ணப்பித்த மந்திரிகள் மொழிப்படியே பிராமணர்களை வரவழைத்து யாகாதி கிர்த்தியங்களைச் செய்து வஞ்சனையில்லாமல் பிராமணர்களுக்கு தன தான யாதிகளை கணக்கில்லாமல் வருஷித்தான்.

அவ்வாறு யாகாதி கிர்த்தியங்களைச் செய்தும் பிரமஹத்தியானது நிவர்த்தியாகவில்லை உடனே யரசனனவன் மந்திரிகளுக்குத் தெறிவித்துத் தீர்த்த யாத்திரை செய்யும் வண்ணம் தீர்மானித்து பல புண்ணிய தீர்த்தங்களையுங் கண்டு தீர்த்தமாடினன். அதினலும் தன்னைப் பீடித்து நின்ற பிரமஹத்தியானது நீங்கவில்லை. அரசனும் மிகவுந் துக்காக்கிரந்தனுய் தன்னுடைய குல குருவாகிய வசிஷ்டரிருக்குமிடத்திற்குத் தேடிச் சென்று வசிஷ்ட மஹாமுனிவரைக்கண்டு அடியற்ற மரம்போலும் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்றுகொண்டு ஹே மஹானுபாவரே! நான் எது வளவோ புண்ணிய கர்மங்களைச் செய்தும் என்னைப்பிடித்து பீடிக்கின்ற இப்பிரமஹத்தியானது என்னைவிட்டு விலகவேயில்லை. நான் படுகிற துன்பமோ அளவு இல்லா

த துன்பமாக இருக்கின்றது. ஹே நாதா! எங்கள் குல த்திற்கெல்லாந் தெய்வமே என்று பலவாருக பிரலாபி த்து இவ்வத்தியைப் போக்கடிக்கும் ஸ்தலம் ஓர் ஸ்தலம் இப்பூலோகத்திற் கிடையாதா ஏதேனுமோர் அரிய க்ஷே த்திரமிருந்தால் அடியேனுக்குத் தெரிவித்து என் பாபத் தைப் போக்கடிக்கவேண்டும் ஹேகருணாநிதியே யென்று மிகவுமிரங்கி கேட்டுக்கொண்ட முசுகுந்த சக்கரவர்த்தி யைப்பார்த்து வசிஷ்ட முனிவரும் கிருபைகூர்ந்து கூறுகி ன்ருர். ஓ மஹாராஜனே! பூலோகத்தில் கிழக்குச்சமுத்தி ரக்கரையில் மஹா பிரசித்தமான ஸ்ரீ சிதம்பர க்ஷேத்திர த்திற்கும் வேதாரண்ணிய க்ஷேத்திரத்திற்கும் நடுவில் காயாரோஹண க்ஷேத்திரத்திற்கும் மேற்கில் தேவசானி த்திய நகரமென்கிற திருச்சிக்கல் என்னு புராதன நகர மொன்றிருக்கிறது. அவ்விடத்தில் என்னுடைய பர்னசா லேயுமிருக்கிறது. அகஸ்தியர் முதலான மஹாரிஷிகளுடைய ஆச்சிரமுமிருக்கின்றது. அந்த க்ஷேத்திரத்திற்குச்செ ன்று அங்குள்ள பாற்குளத்தில் ஸ்நானம் புரிந்து நவநீத ஈஸ்பரரை பூசித்துத் தரிசனே செய்வாயே யானுலுன்னேப் பிடித்து பீடிக்கும்படியான பிரமஹத்தியானது தொலே ந்துபோகும். முன்னிலும் பதின் மடங்கு செல்வத்தை யுடையவனுகயிருப்பாய். இதில் எட்டுணேயேனும் சந்தேக மே கிடையாது என்று திருவாய்மலர்ந்தருளிய வசிஷ்ட முனிவருடைய மொழியைக் கேட்டு நம்பகங்கொண்டு உடனே திருச்சிக்கல் நகரத்தை யடைய அவ்வெல்லேயை

மிதித்தவப்பொழுதே அரசனைப் பிடித்துப் பீடித்துக்கொண்டிருந்த பிரமஹத்தியானது நாசமடைந்து போயிற்று.

உடனே அத்தலத்திலுள்ள பாற் குளத்தில் ஸ்நாநம் செய்து அத்தலத்திலெழுந்தருளியிருக்கின்ற வெண்ணெலிங்கப்பெருமானுக்கு அபிடேக ஆராதனை முதலிய சிறப்புக்களைச்செய்து அத்தலத்திலுள்ள அந்தணர்களுக்குப் பிராமணபோசனமும் செய்வித்து அத்தலத்திலுள்ள பிராமணர்களுக்கு அன்னதானமும், சொர்னதானமும், கன்னிகாதானமும், இல்லறதானமும் மற்றுமுள்ள தானங்களையும் அவ்வவர்கள் வேண்டிய மட்டும் செய்தருளினான்.

நவநீத ஈஸ்வரருக்குக் கர்ப்பகிரகமும், அர்த்தமண்டபம், மஹாமண்டபம். ரோபானமண்டபம் முதலான நாநாவித மணிகளாலிழைக்கப்பட்டு மிகவும் விசித்திரமாக அமைப்பட்ட விமானமும் தேவேந்திரனுடைய உத்திரவைப்பெற்ற தேவசிற்பியால் ஆபரணமும் தேவசகிதமான பஞ்சபிரகாரங்களையும் மஹா மேருவுக்கு நிகர்த்த கோபுரங்களையும் மிக்க உன்னதமாகச் செய்வித்தான்.

தவிரவும் உடனே வானமளாவிய மாடமாளிகைகளையும் மஹோத்ஸவம்செய்ய அலங்காரமான வீதிகளையும் நிர்மாணம் செய்தான். அவ்வாலயத்திற்கு உத்ஸவ மூர்த்தியையும் ஸ்ரீ ஆனந்தநடேச மூர்த்தியையும் பிரதிஷ்டை செய்வித்தான்,

சித்திரை மாதம் சித்திரை நக்ஷத்திரத்தில் இரதோத்ஸவ வைபவத்தையும் செய்வித்தான். இந்தபிரகாரம் உத்தம அரசனாகிய முசுகுந்த சக்கரவர்த்தியும் சிவகயிங்கிரியங்க ளைச்செய்து அகண்ட பூமண்டலாதிபதியாகி பூலோகத்தில சகல சுகத்தையும் அடைந்து தேகாந்தத்தில் சிவசாயுச்சியத்தையும் அடைந்தான் என்று சௌனகமுனிவரைப்பார்த்து ஸ்ரீநந்திதேவரானவர் திருவாய்மலர்ந்தருளி பின்னும் கூறுகின்றார்.

பூர்வம் இந்திரன் முதலிய அஷ்டதிக்குப் பாலகர்களும் அச்சிக்கல் க்ஷேத்திரத்தில் இலிங்கப்பிரதிஷ்டைசெய்து சிவசாயுச்யம் பெற்றார்கள். இவ்வண்ணமா? பலமுனிவர்களும் பல சித்தர்களும் அவரவர்கள்பேரால் இலிங்கப்ரதிஷ்டைசெய்து சூசித்துச் சிவசாயுச்சியத்தையடைந்தார்கள்.

நவநீத ஈஸ்வரர் ஆலயத்திற்கு கிழக்குத்திசையில் ஓர் பர்ணபதந்தூரத்தில் ஸ்ரீமஹாலக்ஷிமியால் பூசிக்கப்பட்ட மஹாலிங்கமும் தீர்த்தமும் அவ்விலக்குமி வசித்த தலமும் இருக்கின்றது பாற்குளக்கரையிலுள்ள தக்ஷணகயாவுக்கும் மேற்குத்திசையில் தீர்த்த சேவையையுத்தேசித்து வந்த மஹா விஷ்ணுவும் கயாமாதவரென்று திருநாமந்தாங்கி அத்தலத்தின்கண் வசித்துக்கொண்டிருக்கின்றார். அதற்கும் தென் பக்கத்தில்விருத்த காவேரி என்ற ஓர் தீர்த்தமிருக்கின்றது. அத்தீர்த்தக்கரையில் ஸ்ரீசுப்பிரமண்யக்கடவுளானவர் தன் விவாகத்தைக்குறித்து அவர்

தம் சக்தியான தேவசேனையால் தாபித்துப் பூசிக்கப்பட்ட மஹா லிங்கமும் இருக்கின்றது.

அச்சத்தீஸ்வரரைத்தரிசிப்போர் சகல பாபங்களினின்று நீங்குமோட்ச பூமியைச்சேர்வார்கள். காசிஸ்தலத்தில் மரணமடைந்தவர்களுக்கு முத்தியளிப்பதுபோல இச்சிக்கல் நகரையடைந்தவர்களுக்கு மோட்சத்தைக்கொடுத்துஈடேற்றுவைக்கும். ஆதலால் இச்சிக்கல் நகரத்தினுடைய மஹாத்மியத்தை கூறுவதற்கு யாவரால்தான் கூடும். மாசிமீ மஹ நக்ஷத்திரத்தன்று இப்பாற்குளத்தில் ஸ்நானம் செய்கின்றவர்களுக்கு சகலவித பாபங்களும் விலகிப்போம். இதில்எட்டுனையும் சந்தேகமேயில்லை. இத்தலத்தில் திருநந்தவனம் வைப்பவர்களுக்கு அதில் உண்டாகும் புஷ்பங்களின் தொகை எவ்வளவோ அவ்வளவு காலம் வரைக்கும் மான்மழுகானகண்ட சதுர்ப்புஜதாரியாகிய சாட்சாத் காரசைதன்னிய பஹவானுகிய பரமசிவத்தின் திருஷ்டித்தாமரையின்கண்ணே நித்தியமாகத்தங்கி வசிப்பார்கள்.

மஹா பிரதோஷகாலங்களில் இத்தலத்திலெழுந்தருளியிருக்கிற நவநீத ஈஸ்வரருக்கு மஹா அபிஷேக ஆராதனைசெய்கின்றவர்களுக்கு இவ்வுலக போக யோக்கிய சம்பத்தெல்லாம் மேன்மேலும் பெருக உண்டாகும். சரீராந்தத்தில் நித்தியமான முக்தியையும் பெறுவார்கள்.

சித்திரை மாதம்முதல் பன்னிரெண்டு மாதங்களிலும் விடாமல் மாதபூசை செய்விப்போர்கள் சகல பாபங்களையும் நீத்து சகல புண்ணியத்தையுமடைவார்கள். பிறகு சா

ட்சாத்கார ஸ்ரீ பரமசிவத்தினுடைய குஞ்சித பாத நிழலை
யும் பெறுவார்கள் ஆனதால் இப்பேர்ப்பெற்றவை பாபத்
தையுடையவாகிய இச்சிக்கல் ஸ்தலத்திற்கு அமைக்கப்ப
ட்ட இப்புராணத்தை படிப்பவர்களும் கேட்பவர்களும்
எழுதினவர்களும் எழுதச்சொன்னவர்களும் ஆகிய யாவர்
களும் இவ்வுலகிலுள்ள போக போக்கியங்களை அனுப
வித்து ஸ்ரீ பரமேஸ்வருடைய பாதாரவிந்தத்தின்கண் வா
ழ்ந்துகொண்டிருப்பார்கள் என்று கூறிய வண்ணம் நந்தி
தேவர்மூலியம் வழி முறையறிந்துணர்ந்த சூத புராணிகரா
னவர் நைமிசவன மஹரிஷிகளுக்குக் கூற அதைக்கேட்ட
முனிவர்களனைவரும் மனமகிழ்ச்சியோடும் வாழ்ந்து வந்
தார்கள்.



சக்தியாயதாக்ஷி.



காமதேனு.



குடசவிருக்ஷம்



நவநீதேசுவரர்



வசிஷ்டர்.

சிவமயம்.

தேவசானித்தியபுரமென்னும்
திருச்சிக்கல் மான்மியம்

காமதேனு விமோசனப்படலச்சுருக்கம்.

விருத்தம்.

திருமலியுங்கையிலை யிடத்தரன்பாற்காம
தேனிறைஞ்சிப்பூமியினில் வாசஞ்செய்து
வரவருளவேண்டுமென, துவாதசத்தால்
வருஞ்சாமகால மெனவறிதியென்ன
ஒருவிடை கொடதுவரவசகால மேவ
உருபசியாலுயிர்துறந்த ஞமலிதன்னை
பருகிவரப்பரமனது ச. பமேற்றுப்
பாரதனிற் புலிமுகமாய்ப்பரந்ததன்றே. (க)

இதுவுமது.

யெம்பெருமானிடம் பிறிது சாபத்தாலே
இருநாகை நகருக்குங்கீழ் வேளூர்க்குஞ்
செம்பாதியுறுஞ்சிக்கல் சேத்திரத்தில்
திருக்கேயா தீர்த்தமதிலாடி நாளும்
வம்புமலர் மல்லிகையினடிவாரத்தில்
வதிந்து விமோசனமடைந்தும் வசிட்டர்வேண்ட
சம்புவுமஃதிருக்குமிடஞ்சொல்ல வந்து
சார்ந்தனரப்போது கண்டார் தவத்தின் மிக்கார். (உ)

வசிட்ட மகாமுனிவர்கள் பூசனைப்படலச்சுருக்கம்.

அந்த மகாமுனிவருமவ்வாவின்பாலா
லமைந்தவொரு தீர்த்தமதிலாடி வெண்ணை
கந்தமுறத்தாபனஞ்செய்ததைப் பூசிக்கக்
கண்ணுதலுங் காக்ஷியுருவாகத்தோன்றி
சிந்தையுறுமடியவருக் கெளியராகித்
தெவிட்டாத தெள்ளமுதமாகியார்க்கும்
பந்தமுறும்பிணிக்குமொரு மருந்தமாகிப்
பரகதிக்கு வித்தாகியிருந்ததன்றே. (௬)

மூர்த்தி விசேடம்.

வெண்ணைலிங்கப்பெருமானைத் தெரிசித்தோர்க்கு
மேதினியிற் காசிதனிலிறந்த பேர்க்கும்
எண்ணிலொரு தகை முத்தியாகுமென்று
இயம்புதலால் வேதங்களிந்த மூர்த்தி
கண்ணெதிரிலடைந்தொருவரன்னதானங்
கனிவுபெறச்செய்தவர்கள் கருமப்பேற்றால்
நண்ணி நீதி யிவ்வுலகமுழுதுமாண்டு
நாயகமாஞ்சிவலோக நணுகிவாழ்வார். (௭)

முசுகுந்த சக்கரவர்த்தி பழிநீங்கியபடலம்.

இதுவன்றி யயோத்தி நகரந்தன்னில்
இருந்தரசுபுரிந்த முசுகுந்தனென்போன்
கதுவென்று வசுவமதிலேறி வேட்டை
கானகத்திலாடிவருங்காலமாவால்
மிதியுண்டு வீய்ந்தவேதியன் பாபத்தால்
மேவிவரும் பழியெக்குந்தீராதாகி
மதுவொன்று பொழிலாரிந்நகரின் மேவ
வன் பழியுநீங்கி யிவண்வதிந்திட்டானல். (௮)

இதுவுமது.

வதிந்தவனும் வானுயர் பொற்றிருக்கோயிற்கண்
வண்டிரையுங் கொன்றைமலர்ச்சிகழிவேய்ந்து
பொதிந்தசடைத்தேனுவிடங்கரைத்தாபித்துப்
பொலிவுமிகுஞ் சித்திரைத்தேர் புதிதாச்செய்தான்
பதிந்த பரஞானமுறும் பிள்ளையாரும்
பதிகமது பண்கொண்டு பாடப்பெற்றுங்
குதிந்து தளையமரர்களையிட்ட சூரன்
குடிபறியச் சத்தியிடக்குகன் வேல்கொண்டான் (சு

சூரசங்காரப்படலம்.

தங்கமிகுஞ்சத்திவடிவேல் கைக்கொண்டு
சூரன்முதற்சேனைகளை வேரோடெய்த
வெங்கள்பிரான் சிங்கார வேலனெந்தை
இயற்கைதனை யெம்மாலே யியம்பலாமோ
சங்கரன் மாலயன் முதலாந்தேவரோடுஞ்
சராசரங்களுயிரெவைக்கு மாதியாகி
கக்குல்பகலற்ற விடந்தானேயாகிக்
கருதரிய குருமூர்த்திவடிவாமன்றே. (எ)

இதுவுமது

அரிபிரமன் முதலான தேவரெல்லாம்
அஞ்சிடவேயாயிரத்தெட்டண்டமாண்டு
விரிதிசைகள் புகழ்பரப்பி விளங்குஞ்சூரன்
மேலான தவவலியானவனை வீய்த்த
பெரிய வடிவேலினுக்கு வீரசத்தி
பெயரவறு முகத்தவரின் நகர்க்குத்தென்கீழ்த்
தெரிதிசையில் வீரிகின்ரயார் கடம்பதீர்த்தந்
தேர்ந்தாடிச் சிவபூசை செய்வாரானர். (அ)

இதுவுமது

கங்கைமதி சடைக்கணிந்த பெருமான்றன்னைக்
கருத்துறவே மத்தியானகாலந்தன்னி
லங்கைமலர்கொடு பூசித்தந்திப்போதி
லரிய திருச்சிக்கல் நகர் பால்த்தீர்த்தத்தில்
துங்கமுறக்குடைந்து சத்தியாயதாக்ஷி
துணைமலர்த்தாள் கருத்துறவே தவமேற்கொண்டு
பங்கமிலாச்சிங்காரவேலினுற்ற
பழிநீங்கியுமையருளாற் கரத்திலுற்ருர். (சு)

பார்வதீசுரப்படலம்.

வேறு

கண்ணுதற்பெருமானுமையொடு விடைமேற்
காணுறப்பூவளங்கருதி
விண்ணுறுமார்க்கமாகவே வந்து
விரிகடலுலகிலெவ்வளனும்
நண்ணுறத்தெரிந்து சிக்கல் மாநகரில்
நணுகுமுன் யாவையுமீனற
ஒண்ணுதலுமையார் வெண்ணெலிங்கேசற்
குரியகோயிற்குத் தென்கீழ்பால். (ம)

இதுவுமது

சுத்தவத்து விதச்சுயம்பிரகாசச்
சுடர்ச்சிவலிங்கம் நேர் வீறீஇ
வித்தகத்தீர்த்தமுற்றிட மூழ்கி
விதிப்படி பூசை செய்தமையால்
உற்ற பார்ப்பதியீசுரமெனப்பெயரா
யோங்குமப்பதிநியாடி
அத்தனைத்தொழுதவைந்து பேரடைந்த
அரும்பிணி யொழிந்து வீடடைந்தார். (மக)

கோசுசிகப்படலம்.

நற்றவம்புரிய கோசிகனதனை
நாட்டமாயிரத்தவன் மொழியால்
சித்தமதொருக்கி நயற்றவமழிக்கச்
செய்தனன் திலோத்தமையதன்னை
கற்றிடு முனியுமிந் நகரடைந்து
கனிந்தபால் தீர்த்தத்தின் மூழ்கி
உற்றிடு நவநீதப்பெருமானை
உளங்கொளப்பழி தொலைந்ததுவே (யஉ)

இதுவுமது

அருளுருவான வெண்ணெலிங்கேசர்க்
கடுத்த உத்தரத்திலோர் தீர்த்த
தெருளுறச்செய்தாங்கிருந்து நற்றவத்து
சிந்தையுற்றிருந்தனர் தென்பால்
மருளறப்பெருகுவிருத்த காவேரி
வழங்குதலாலுமித்தலத்தில்
இருளறக்கதியைக் கொடுப்பதென்றுரைப்பர்
இருமையுமுணர்ந்திடும் பெரியோர் (யங)

வாதாவி வில்வலன்வதைப்படலம்.

வேறு

தெருட்படு நற்கையிலையினிலுமையை ஈசன்
திருக்கலியாணஞ் செய்யுநாளிற்றென்பால்
உருக்கொடு மேனிவர வகத்திசர்மேவ
லுறுங்காலில் வில்வலன்வாதாவி யென்னும்
மருட்படுதுன்மனத்தவரை விளித்தல்செய்த
வன்பழியை நீக்க யிவண் வதிந்தோர் தீர்த்தம்
அருள்படுதபயராக்கி யரனையுள்கி
அடுத்த பழிதொலைத்துமவரங்குற்றூரால் (யச)

மூர்த்தி தலம் தீர்த்த விசேடம்.

மூர்த்திபலம் கீர்த்தி விசேடம்.

பேராருமூர்த்தி தலந்தீர்த்தமூன்றும்
பிறங்குதலாலிந்நகர்போல் புவனத்துள்ளு
மாராலுமெடுத்தியம்ப நகரொன்றில்லை
யாதலிலிந் நகர் வசித்துமாடித்தீர்த்த
மேராரும்பெருமானைப் பாடியேத்தி
யிருகரமுஞ்சிரசினின் மேலெடுத்துக்கூப்பி
நீராருங்கண்ணருவி பொழிய நெஞ்ச
நெக்குருகுமவர்க்கு முத்திநேருமன்றே (யரு)

தீர்த்த விசேடம்.

அரியதொரு விந்நகரில் வந்தாரேனு
மறியாமலிந் நதியிலாடினாலும்
பரிமகத்திலுறும் பயனுமடைந்து மேலும்
பவவினையை நீக்கியுறும் பதமேற்கொள்வர்
உரியமனத்தொடர்வறவே மூழ்குவோர்க
ளுறும் பலனைச்சொலப்போமோ வுயர்ந்தோராலும்
கரியநெடுமாலயனு முதலாந்தேவர்
கருதியிதிலாடிவரும் வினைகள் தீர்ப்பார் (யசூ)

கந்தசஷ்டி மகோற்சவப்படலம்

வேறு

மறைவழியிற் கந்தசஷ்டி மகோற்சவத்தின்
மகிமைதனை மனத்திற்கொண்டு
இறையளவுமெடுத்துரைப்ப வேறு நகர்
திருச்சிக்கலினுக்கீடாமோ
கறையமையாத்துலமதி நாலாம் விழாவிற்
கதியளிக்கும் ரிஷபமீதல்
விறைவமைய சிங்காரவேலவர்
நன்னெறியளிக்க நேர்வாரன்றே (யஎ)

வேறு

பொன்னுருவாமிர்தமிசை வைந்தாநாளிற்
புகழ்விளங்குமுச்சபமு நீலவண்ணத்
தன்மயமாஞ்சத்தியாய தாக்ஷியம்மை
தரக்கரத்திற் சிங்காரவேலைத்தாங்கு
முன்னதமு மாறுநாள்த்தேனும்பாலு
முயர்ந்த பன்னீர்க் காவடிகளபிஷேகித்தும்
வின்னமுறுஞ்சூரனைச் சம்மாரஞ்செய்தும்
வித்தகமா மிந்திரன்றன் விமானமுற்றார். (௰அ)

வேறு

அத்தினமிரவிலடற்கதிர் வேலோ
னணிமயிலவர் கணத்தெழுந்து
உற்றிடு காக்ஷிகொடுத்தது மறுநாள்
உடுக்கிடைதுணைக்கயல் விழியு
மூற்றிடாக்குயமு முருந்து புன்னகையு
முண்டகவதனமு மொழியக்
கற்றிடாதழ தத்திருந்த தெய்வானை
யம்மையைக் கடிமணமுடித்தும் (௰௯)

இரவதனில் ரதமிரு நான்காநாளில்
யென்னுவிழவிடமன்றியுலகர் கூடி
பரவிமிகத்துதிக்க வள்ளியம்மைதன்னைப்
பரிந்திடவே மணமுடித்துமக்காலத்தில்
வரிமிளிரக்குடைந்தாடி மதப்பிலிற்றும்
மலர்மாலையலங்கரிக்கு மறத்தின்மீது
தெரியவருங்காட்சி யிதுவன்றி யின்னர்
திருவிழாச்சிறப்பு மிகவாகுந்தேரே. (௨௰)

வேறு

விளங்குமெய்யறிவானந்த வெண்ணிலிங்கேசர் வாழி
களங்கமில் வேனெடுங்கண்மைநயுங்கணேசர் வாழி
துளங்கிடு மலாமென் கூந்தறரேகையரிருவரோடும்
உளம்புகு குகனுவாழி யுயர்ந்தவேல் வாழி வாழி. (உக)

வேறு

அரியயன் முதற்றேவர்களனைவரும் வாழி
உரியநற்கலைவேதமு வாழியுள்தவத்தா
பெரியர் மாமறையவர்களும் வாழி பெட்புறுநூலத்
தெரியு நாவலர் வாழி நேர்த்திருவிழா வாழி. (உஉ)

முற்றிற்று.

இந்தப்புராணம் தமிழில் முழுதும் மொழிபெயர்த்துப் பின்னுல் அச்சிடப்படும்.



சுப்ரமணியசுவாமி



முசுகுந்த சக்ரவர்த்தி



விருஷபாரூடர்

சம்பூர்ணம் வாழி.

வாழி சிக்கில்வாளநகர் நன்மையா
வாழி வெண்ணெலிங் கீசர் மலரடி
வாழிவையகம் யாவையுமின்புற
வாழியந்தணர் மன்னவர் யாருமே.

திருச்சிக்கல்-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

வானுலாவுமதிவந்துலவும்மதின்மாளிகை
தேனுலாவுமலர்ச்சோலைமல்குந்திகழ்சிக்கலுள்
வேனல்வேளைவிழித்திட்டவெண்ணெய்ப்பெருமானடி
ஞானமாகநினைவார்வினையாயினநையுமே.

மடங்கொள்வாளைகுதிகொள்ளுமணமலர்ப்பொய்கைசூழ்
திடங்கொண்மாமறையோரவாமல்கியசிக்கலுள்
விடங்கொள்கண்டத்துவெண்ணெய்ப்பெருமானடிமேவியே
யடைந்துவாழுமடியாரவரல்லலறுப்பரே. (௨)

நீலநெய்தனிலவிம்மலருஞ்சுனைநீடிய
சேலுமாலுங்கழனிவ்வளமல்கியசிக்கலுள்
வேலொண்கண்ணியினளையோர்பாகன்வெண்ணெய்ப்பிரான்
பாலவண்ணன்கழலேத்தநம்பாவம்பறையுமே. (௩.)

கந்தமுந்தக்கைதைபூத்துக்கமழ்ந்துசேரும்பொழிற்
செந்துவண்டின்னிசைபாடன்மல்குந்திகழ்சிக்கலுள்
வெந்தவெண்ணீற்றண்ணல்வெண்ணெய்ப்பிரான்விரையார்கழல்
சிந்தைசெய்வார்வினையாயின்தேய்வதுதிண்ணமே. (௪)

மங்குறங்குமறையோர்கண்மாடத்தயலேமிகு
தெங்குதுங்கப்பொழில்செல்வமல்குந்திகழ்சிக்கலுள்
வெங்கண் வெள்ளேறுநடைமேவவே
தங்குமேற்சாதந்திருநாளுந்தகையுமே. (௫)

வண்டிரைத்துமதுவிம்மியமாமலர்ப்பொய்கைசூழ்
தெண்டிரைக்கொள்புனல்வந்தொழுகும்வயற்சிக்கலுள்.
விண்டிரைத்தமலராற்றிகழ்வெண்ணெய்பிரானடி
கண்டிரைத்துமனமேமதியாய்கதியாகமே. (௬)

முன்னுமாடம்மதின்மூன்றுடனேயெரியாய்விழத்
துன்னுவார்வெங்கணையொன்றுசெலுத்தியசோதியான்
செந்நெலாரும்வயற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
யுன்னிநீடமனமேநினையாய்வினையோயவே (௭)

தெற்றலாகியதென்னிலங்கைக்கிறைவன்மலை
பற்றினான்முடிபத்தொடுதோள்கணெரியவே
செற்றதேவனஞ்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
யுற்றுநீநினையாய்வினையாயினவோயவே. (௮)

மாலினோடருமாமறைவல்லமுனிவனுங்
கோலினார்குறுகச்சிவன்சேவடிகோலியுஞ்
சீலந்தாமறியார்திகழ்சிக்கல்வெண்ணெய்ப்பிரான்
பாலும்பன்மலர்தூவப்பறையுநம்பாவமே. (௯)

பட்டைநற்றுவராடையினாரொடும்பாங்கிலாக்
கட்டமண்கழுக்கள்சொல்லினைக்கருதாதுநீர்
சிட்டன்சிக்கல்வெண்ணெய்ப்பெருமான்செழுமாமறைப்
பட்டன்சேவடியேபணிமின்பிணிபோகவே. (௧௦)

கந்தமார்பொழிற்காழியுள்ஞானசம்பந்தனற்
செந்தண்பூம்பொழிற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடிச்
சந்தமாச்சொன்னசெந்தமிழ்வல்லவர்வானிடை
வெந்தநீறணியும்பெருமானடிமேவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.